1975 மார்ச் 6]

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த விதிகளைப் பின்பற்றினால் நிலவள வங்கியிலே கடன் அளிப்பதில்லை. காரணம், அது வேண்டுமானால் சாலை போடுவதற்கும், மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கும் தான் கொடுக்கப்படுமே தவிர, புதுக் கிணறுகள் வெட்டுவதற்குப் பணம் இல்லையென்று சூளூர், பல்லடம் போன்ற பகுதிகளிலுள்ள நிலவள வங்கிகளிலே சொல்கிறார்கள். அது எந்த அடிப்படையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விதிகளைப் பின்பற்றி கிணறு வெட்ட முடியுமென்றால், அதற்குக் கொடுக்காமலிருப்பது ஆச்சரியம் தான். அப்படி இருக்கமாட்டார்கள். நான் முன்னரே சொன்னதைப் போல், மின்சாரம் கிடைக்காத பகுதியிலே கிணறு வெட்ட அனுமதி கொடுத்தால், பின்னாலே பணம் திருப்பிப் பெற முடியாது. அது காரணமாக இருக்கலாம். அப்படி இருந்தால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

Essence from Jasmine

* 298 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Agricultural University, Coimbatore has set up a pilot plant for the extraction of essence from Jasmine; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) ரூ. 10,000 செலவில் முன்னோடி இயந்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

திரு. தி. பொன்னுமலை: சேலம் மாவட்டத்திலே மல்லிகைப் பூ ஆயிரம் ஏக்கரிலே பயிர் செய்யப்படுகிறது. சில நேரங்களிலே ரூ. 2 கூடப் பயிரிடும் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அதனால், விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தமிழகத் திலே மல்லிகைப் பூத் தைலத் தொழிற்சாலை ஏற்படுத்தி, நிரந்தர மார்க்கெட் உண்டாக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இப்போது மல்லிகைப் பூவிலிருந்து தைலம் "எஸ்ஸன்ஸ்" தயாரிப்பது என்பது இன்னும் பரிசோதனையில் தான் இருக்கிறது.

ஒரு முன்னேடி இயந்திரமென்று சொன்னேன். இது நாள் ஒன்றுக்கு பத்து கிலோ பூக்களிலிருந்து தான் தைலம் எடுக்கக்கூடியது. இன்னும் சோதனையில் இருக்கிறது.

Pesticides

* 209 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken to assess the annual requirement of pesticides for the State and to procure them without delay?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: விவர அறிக்கை * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

* 210. வினு—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1973–74-ல் விவசாய விநியோக டெப்போக்களில் விற்கப் பட்ட பூச்சி மருந்து எந்தெந்த நிறுவனங்களிலிருந்து வாங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: விவரப்பட்டியல் @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல்: பூச்சிக்கொல்லி மருந்துகளை வயலில் அடித்தாலும் கூட பூச்சிகள் சாவதில்லை. ஆகவே, உறுதியான நல்ல பூச்சி மருந்துகளை அரசாங்கமே டெப்போக்கள் வைத்துக் கொடுக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கு. இராசமாணிக்கம்: தஞ்சை மாவட்டத்திற்குத் தேவை யான அளவுக்கு பூச்சிகொல்லி மருந்துகள் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, விலைகளும் அதிகமாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத் திலேயே பூச்சிகொல்லி மருந்து தொழிற்சாலை நிறுவ அரசுக்கு உத்தேசம் உண்டா?

---

* *125–127*-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@ *127–131*-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.